11வது ஆண்டில்

# உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

விளம்பரம்
VLAMBARAM™

416-282-8059
416-282-4978

நதி 11 JULY 01, 2001 பாலம் 13



- நன்மை / தீமை கொடுக்கும் 'Internet' (பக். 8)
- புதிய பயணம் ஆரம்பிக்கும்.... கொன்கோட் விமானம் (பக். 2)
- உடலுறவில் யோகாசனத்தின் பங்கு.... (பக். 13)
- உடல் அங்கவீனர்களிற்குரிய வாகனத் தெரிவு (பக். 04)
- புதிய / பழைய வாகனங்கள் வாங்குபவர்களிற்கு (பக். 7)
- உலகின் உயர்ந்த கோபுரம் (பக். 11)
- எம்மைப் பார்த்து பலர் சிரிக்கக் காரணம்தான்....(பக்.12)
- இராட்சதர்கள் பூமியில் இருந்திருப்பார்களா? (பக். 9)
- செயலில் திறமைபெற உளவளர்ச்சியா/ உடல்வளர்ச்சியா? (பக். 15)





RE/MAX
Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.
Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME
Office: (416) 491-4002
Pager (416) 589-4270
MEMBER OF RE/MAX PLATINUM CLUB


### உலக நாடுகள் வரிசையில்
### சவூதி அரேபியா (SAUDI ARABIA)

அராபியா நாடுகளில் பெற்றோல் மற்றும் எண்ணெய் வளங்களினால் செல்வம் கொழிக்கும் நாடுகளில் "சவூதி அரேபியா" உம் ஒன்றாக இருப்பதுடன் அங்கு தொழில் வாய்ப்பு கருதி இலங்கை உட்பட பல வெளி நாட்டவர்களை வேலைக்கு எடுக்கும் நாடுகளிலும் இதுவும் ஒன்றாகும். பெற்றோலியம் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் உலக முன்னணியில் நிற்கும் நாடு ஆகும்.

**மொத்த நிலப்பரப்பு:** 1.2 மில்லியன் ச.மைல்
இதன் எல்லைகளாக ஜீமன் (Yeman), ஓமான், ஈராக், ஜோர்டான், குவைத் போன்ற அராபிய நாடுகளுடன் செங்கடல் (Red Sea), பேர்சியன் வளைகுடா கடல் (Persian Gulf) போன்றவையும் உள்ளன.
**மக்கள் சனத்தொகை:** 21.5 மில்லியன்
**தலைநகரம்:** றியாட்ச் (Riyadh)
இப் பெரும் நிலப்பரப்பு நாட்டின் மத்தியில் உள்ளது
**மொழி:** அராபிக், ஆங்கிலம்
**மதம்:** முஸ்லீம்
**காலநிலை:** இந் நாட்டின் நிலப்பரப்புகள் மிகவும்

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்)

### உன்னை அறிந்தால்

வாழ்வில் பலவிடயங்களைப் பலர் தங்கள விருப்பப்படியே செய்கிறார்கள். இதனால் பல நன்மை தீமைகள் அவர்களிற்கும் அவர்களுடன் சார்ந்தவர்களிற்கும் ஏற்படும் அல்லது ஏற்படலாம். சில விடயங்களினால் வரும் பாதிப்புகள் / தாக்கங்கள் இலகுவில் தவிர்க்கவோ, மறைக்கவோ முடியாது. இதனால் ஏற்படும் தீயவிளைவுகள் பலரின் வாழ்வில் பல கோர விளைவுகளை ஏற்படுத்திவிடவும் கூடும். இதனால் பல குடும்பங்களில் பல சிக்கல்கள் ஏற்பட்டு, குடும்பங்கள் குலைந்து நடக்க விரும்பாத விடயங்கள் எல்லாம் இலகுவாக அரங்கேறும். ஒற்றுமையான குடும்பங்கள் குலைந்து, பிள்ளைகள் பிரிந்து, பெற்றோர்கள சங்கடப்பட்டு வாழும் நிலைமைகள் ஏற்படும். இப்படிப்பட்ட சிக்கலுக்குரிய மூலகாரணம பேராசை. இப்பேராசை பணத்தில் மட்டுமல்ல, பாலுணர்விலும் ஏற்படலாம். ஒரு முடிவு எடுக்கமுன்பு அதன் நன்மை தீமைகளை அலசி ஆராய்ந்து உடனடியாக / நீண்டகாலத்திற்கு ஏற்படும் விளைவுகளை சிந்தித்து முடிவு எடுத்தால பல சிக்கல்கள் ஏற்படாது.

*நல்லதையே சிந்திப்போம்.*
*நல்லதையே செய்வோம். நாளை நமதே!*

*-நெற்றிக்கண்ணன்*


இழந்த தலைமுடியை மீண்டும் பெற வாருங்கள் சபோனாவிற்கு!

SABONA & Gift

☎: (416) 264-8787
2602 Eglinton Ave.E.
Toronto, Ont., M1K 2R9
☎: (416) 269-8151
www.sabona.ca
www.tamilclub.com/sabona


கற்றுக்கொள்வதால் நீ போதிக்கலாம்
போதிப்பதால் நீ கற்றுக்கொள்ளலாம்.
-லத்தீன் பழமொழி


Singapore Communication

FREE PAGER
-One Year Service $99.00
-Activation $25.00
-Free Panasonic Pager
More Info Call:
416-745-2378 (Sathi)
416-490-7703 (Praba)
416-589-4636 (Hot Line)

$35.00
100 Min Free
Mon-Fri 6pm-8am Free
Fri: 6pm - Mon 8am Free
400 First Incoming Min Free
C/W, C/F, Call ID Free
FREE GIFT AVAILABLE in store
HOT LINE: 416-980-4525



சிவாகம கிரியா பீடம்
☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
☎ (416) 267-8221

Insurance & Financial Services
Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel
- Business

London Life
LIBERTY MUTUAL

✆ 416 291-0451 EXT. 286 / 905 294 2429 / 416 452 6975
10 MILNER BUSINESS COURT, SUIT 900, SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com



# அறிவும் ஆக்கமும் (83)


-விஜே குலத்துங்கம்

சென்ற வருடம் ஜூலை 25ஆம் திகதி பாரிஸில் உள்ள சார்ல்ஸ் டீகோல் விமான நிலையத்தில் இருந்து புறப்பட்டு சில நிமிடங்களில் E4590 என்ற கொன்கோட் விமானம் விபத்துக்குள்ளாகி 113 பேர் இறந்தார்கள். அதன் பின்னர் எல்லா கொன்கோட் விமானங்களும் தரையிறக்கப்பட்டு, நிறுத்தி வைக்கப்பட்டன. இனிமேல் Concord விமானம் பறக்க முடியாது. கொன்கோட் விமானத்தின் சரித்திரமே முடிந்து விட்டது என்றெல்லாம் கூறினார்கள். ஆனால் இப்போது இந்த விமானங்கள் இந்த வருடம் இலையுதிர் காலத்தில் மீண்டும் பறக்க இருக்கின்றன என கூறப்படுகின்றது. இது எப்படி சாத்தியமாகின்றது என்பதைப் பார்ப்பதற்கு முன்னர் இந்த விமானம் பற்றியும் கடைசியாக நடந்த விபத்து பற்றியும் பார்ப்போம்.

முன்னர் தனியாக இயங்கி வந்த பிரித்தானியாவைச் சேர்ந்த British Aerospace நிறுவனமும், பிரான்சை சேர்ந்த Aerospatiale of France நிறுவனமும் கூட்டாக 1962 ஆம் ஆண்டு இயக்கி விமானங்களை தயாரித்து Concord இன் முதலாவது விமானப் பயணம் 1969ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது வர்த்தக ரீதியான விமானப் பயணம் 1976ஆம் ஆண்டு ஜனவரி 21ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

Concord விமானம் நான்கு Rolls-Royce / Snecma Olympus S93 என்ஜின்களை கொண்டது. ஒவ்வொரு என்ஜினும் 38,000 இறாத்தல் தள்ளும் விசையை அல்லது Thrust ஐக் கொண்டது. விமானம் பறப்பதற்கு முன்னர் ஓடு பாதையில் ஓடும் போது மணிக்கு 195 மைல்கள் அல்லது 315 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லும். இவ் விமானம் பறப்பதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு 5,638 இம்பீரியல் கலன்கள் எரிபொருளை உபயோகிக்கின்றது. இதற்கு 10 Landing Wheels அல்லது சக்கரங்கள் உண்டு. இந்த விமானம் 60,000 அடிகள் உயரம் வரை பறந்து மணித்தியாலத்திற்கு 1350 மைல்கள் என்ற வேகத்தில் செல்லும் சாதாரண விமானங்கள் பாரிஸில் இருந்து நியூயோர்க்கிற்கு செல்ல 7 மணித்தியாலங்கள் எடுக்கும். ஆனால் Concord விமானம் 31/2 மணித்தியாலங்கள் மட்டுமே எடுக்கும். பாரிஸிற்கும், நியூயோர்க்கும் இடையில் 5 மணித்தியாலங்கள் நேர வித்தியாசம் உண்டு. உதாரணத்திற்கு சனிக்கிழமை மாலை 5 மணிக்கு பாரிஸிலிருந்து விமானம் புறப்பட்டால் அதே நாள் 1 1/2 மணித்தியாலங்கள் முன்னதாக நியூயோர்க் அடைந்து விடும்.

இந்த கொன்கோட் விமானம் ஒரு தனித்துவமான கட்டமைப்பைக் கொண்டது. இதன் இறக்கைகள் Delta Wing என்ற கட்டமைப்பைப் கொண்டது. இந்த இறக்கைகள் இரண்டிலும் இரட்டை என்ஜின்கள் இருந்தாலம் மெல்லியதான ஆனால் மிகவும் வன்மையான சுவரினால் பிரிக்கப்பட்டிருக்கும். இதனால் ஒரு என்ஜினுக்கு ஏதாவது நேர்ந்தாலும் மற்றைய என்ஜின் பாதிப்படையாது தொழிற்படக் கூடும். அதைவிட என்ஜின் உடைந்தாலும், மற்றைய பிரதான பாகங்களை அது பாதிக்காதவாறு விமானம் அமைக்கப்பட்டுள்ளது. இதனுடைய மூன்று Hydraulic தொகுதிகளும் சுயாதீனமாக இயங்கக் கூடியன. விமானத்தின் எந்த ஒரு பாகம் இயங்காவிட்டாலும் விமானி பயணத்தை பாதுகாப்பாக செலுத்தி இறக்கி விடலாம்.



சென்ற ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி, பிரான்சிலுள்ள சார்ல்ஸ் டீகோல் விமான நிலையத்தில் இருந்து நியூயோர்க் நகரத்தை நோக்கி பிற்பகல் 4:43 இக்கு விமானம் ஓடுபாதையை விட்டு மேலே கிளம்பியது. கிளம்பிய மறுகணமே கட்டுப்பாட்டுக் கோபுரத்தில் இருந்து விமானத்தின் பின்புறத்தில் நெருப்புப் பிடித்துள்ளதாக விமானிக்கு அறிவிக்கப்பட்டது. விமானி விமானத்தை திருப்பி அருகிலுள்ள Le Bourget விமான நிலையத்தில் இறக்குவதற்காக அங்கு செல்ல முயற்சித்தார். ஆனால் சரியாக பிற்பகல் 4:45 இக்கு விமானம் விழுந்து நொருங்கியதாக அறிவிக்கப்பட்டது. விமானத்தில் இருந்த பயணிகளும் சிப்பந்திகளுமாக 105 பேரும், தரையில் நின்ற விமானம் மோதியாதால் இறந்த எட்டுப் பேருடன் மொத்தம் 113 பேர் உயிரிழந்தார்கள்.

விசாரணைகளில் இருந்து ஓடு பாதையில் விமானம் ஓ[illegible] கொண்டிருந்த போது அதன் டயர்கள் வெடித்ததாக அறியப்படுகின்றது. ஓடுபாதையில் கிடந்த 17 அங்குல உலோகத் துண்டு ஒன்றினாலேயே டயர்கள் வெட்டுப்பட டயர்கள் வெடித்திருக்க வேண்டும் எனக் கூறப்படுகின்றது. வெடித்த துண்டுகள் எரிபொருள் தாங்கியை தாக்கி உடைத்திருக்க வேண்டும் அல்லது என்ஜினுக்குள் துண்டுகள் புகுந்ததால் விமானத்தில் நெருப்பு பற்றியிருக்க வேண்டும். ஓடுபாதையில் இருந்த அந்த உலோகத்துண்டு வேறு ஒரு விமானத்தில் இருந்து கீழே விழுந்திருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. அமெரிக்காவின் Continental Airlines நிறுவனத்தின் DC-10 என்ற விமானத்தின் இதே மாதிரியான உலோகத் துண்டொன்றை காணவில்லை எனவும் அறிவிக்கப்பட்டது.

1979ஆம் அண்டிற்கும் 1981 ஆண்டிற்குமிடையில் நான்கு தடவைகள் கொன்கோட் விமானத்தின் Take off இன் போது டயர்கள் வெடித்துள்ளன. எல்லாச் சந்தர்ப்பங்களளிலும் டயர்த் துண்டுகள் என்ஜினையும், எரிபொருள் தாங்கியையும் தாக்கியுள்ளன. இதன் பின்னர் கொன்கோட் விமானத்தின் ஒவ்வொரு சில்லும், டயர்களும் ஒவ்வொரு பயணத்தின் போதும் கவனமாக பரிசோதிக்கப்பட வேண்டும் என சிபாரிசு செய்யப்பட்டது.

இப்போது Michelin டயர் நிறுவனம் இந்த விமானங்களுக்கு எனப் புது வகை டயர்களை உற்பத்தி செய்துள்ளது. EADS எனப்படும் European Aeronautic defense and Space என்ற அதிகார சபையினால் . இந்த டயர்கள் கொன்கோட் விமானத்தில் உபயோகிக்க உகந்தவை என அத்தாட்சி வழங்கியுள்ளது. இந்த டயர்கள் கொன்கோட் மணித்தியாலத்திற்கு 400 கிலோமீற்றர் என்ற வேகத்தில் ஓடுபாதையில் ஓடுவதை தாங்கக் கூடியன. அது மாத்திரமல்ல டயர்களில் 40 வீதம் காற்று குறைவாயிருக்கும் போது[illegible] அவை உறுதியாக இருக்கும். கடைசியாக விபத்து நடக்க[illegible] காரணமாயிருந்த 17 அங்குல உலோகத் துண்டுகளை விட பெரிதாகவும், கூரானதுமான துண்டுகளின் மேல் விமான் செலுத்தப்பட்டு பரிசோதிக்கப்பட்ட போதும் டயர்கள் உடையாமல் இருந்தன. அத்துடன் எரிபொருள் தாங்கிகள் சேத முறாத வகையில் அவை Kevlar என்ற பொருளினால் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த Kevlar என்ற பொருள்தான் வாகனங்கள் குண்டு துளைக்காதவாறும், நெஞ்சில் அணியும் Vest இலும் உபயோகிக்கப்படுகின்றது. அத்துடன் இந்த டயர்கள் வெடித்தாலும் இந்த துண்டுகள் மிகச் சிறிய துணிக்கைகளாகத் தான் வெடிக்கும். இதனால் என்ஜின்கள் பாதிக்கப்படமாட்டாது.


எனவே புதிய ஆயத்தங்களுடன், வரும் இலையுதிர் காலத்தில் Concord மீண்டும் வானில் பறக்கும் என எதிர்பார்க்கலாம்.

"அறிவும் ஆக்கமும்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் – 361 Highglen Ave, Markham, Ontario, L3S 3M2 என்ற முகவரிக்கு அல்லது **wijeyaku@hotmail.com** என்ற முகவரிக்கு e-mail அனுப்பவும்.


13 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்** புதிய இடத்தில்

☎: (416) 267-0408



**குறுக்கு எழுத்துப் போட்டி இல. 120**

**இடமிருந்து - வலம்**

1. தமிழீழத்தில் இந்த வயிரவருக்கும் இப்பவும் வேள்வி நடைபெறுகிறது
5. சிறுகுளம்
6. கை (வல - இட)
7. கடவுளிடம் வைக்கும் அன்பு (வல - இட)
8. கோல்களை தட்டி ஆடும் ஒரு ஆட்டம்
9. உட்செல்
10. தமிழ் பலகாரம் (வல-இட)
11. சேர்
12. வயல்
14. எண்ணம் (வல - இட)

**மேலிருந்து - கீழ்**

1. பெரிய கருநிற எறும்பு
2. தமிழீழத்தின் ஒரு ஊர்
3. வாசனை எண்ணை
4. ஆடம்பரம்
5. அறிவு
7. முக்கனியில் ஒன்றைத் தரும் மரம்
10. மணமகள்
11. உட்கார்
13. பாதையின் கீழ் நீர்பாய அமைக்கப்படுவது (கீழ் - மேல்)
14. அம்பு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் JULY 28, 2001க்கு முன்னர் விளம்பரம் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.



**118இல் வெற்றி பெற்றோர்**

1) Praveen M., Mississauga, Ont.
2) L. Packirisamy, Willowdale, Ont.

- *ஆட்டிறைச்சி வியாபாரத்தல் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- * அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின தொகையில் உயர்ந்தவர்!
- * வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*

*[Ken-Mark Plaza]*

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்


- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

SPECIAL



- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

Ontario's Drive Clean Accredited Test & Repair Facility




**Tel: (416) 285-4998**

**2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON**

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple

# துர்க்கை அம்மன் ரூர்ஸ்

ரொரன்ரோவிலிருந்து மொன்றியலுக்கு


மொன்றியலிருந்து ரொரன்ரோவுக்கு

அழையுங்கள்

☎416-283-3969

☎416-287-2824

மொன்றியல் ☎514-344-2591



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING

>Railing > Fencing >Welding

Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5

தமிழர் நிர்வாகத்தில்

ஒரு




# EMBASSY

விசா கிடையாது, பாஸ்போட் வழங்கப்படமாட்டாது

ஆனால்

- வீட்டிற்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள்,(Groceries)
- இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
- இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)

**5 SAMOSA $1.00**



Embassy அமைந்துள்ள இடம்: (FINCH / MIDDLEFIELD)

5200 FINCH AVE, SCARBOROUGH

☎ 416-332-8451

# ஒன்ராரியோ மாகாணத்தில் வாகனம் செலுத்துதல்?

- சிவ பஞ்சலிங்கம்



பகுதி(54)

உடல் அங்கவீனமானவர்கள் வாகனம் செலுத்த விரும்பும் போது அவர்களுக்கான வசதிகள் வாய்ப்புகளை ஒன்ராரியோ மாகாண அரசு பல வழிகளிலும் உருவாக்கிக் கொடுத்து வருகின்றது. குறிப்பாக மாகாண போக்குவரத்து அமைச்சும் குடி உரிமைகள் அமைச்சும் இது தொடர்பான பல்வேறு தகவல்களை வாகனம் ஓட்டப் பழகி சொந்தமாக தங்கள் பாவனைக்கு வாகனம் வைத்திருக்க விரும்புவர்களுக்கு போதிய தகவல்களை வழங்கி வருகின்றது.

1) உடல் அங்கவீனமானவர்கள் தங்களுக்குரிய சரியான வாகனத்தினை தெரிவு செய்வது. (முக்கியமாக சக்கர நாற்காலியில் இருப்போரை குறிப்பிடலாம்)
2) வாகனம் ஓட்ட கற்றுக் கொள்ளும் வசதிகள்
3) வாகனக் காப்புறுதி வசதிகள்
4) வாகன உற்பத்தியாளர்கள் வழங்கும் சில சலுகைகள்
5) உடல் அங்கவீனமானவர்கள் தங்கள் வாகனம் உபயோகிக்கும் செலவுகளில் வருமான வரி மீளளிப்புகள்
6) சிறப்பு வாகன தரிப்பு அனுமதிப் பத்திரங்கள்
7) அவசர தொடர்பு சாதனங்கள்
8) குளிர் காலங்களில் வாகனம் செலுத்துதல்
9) உடல அங்கவீனமானவர்கள் வாகனங்கள் வாடகைக்கு எடுக்கும் வசதிகள்.

### சரியான வாகனத்தினை உடல் அங்கவீனமானவர்கள் எவ்வாறு தெரிவு செய்வது?

* Automatic transmission, power brakes and power steering are highly recommend options
* An adjustable (Tilt) steering wheel allows more space when entering or exiting and when operating controls
* Power seats, adjustable in several directions make it easier to get in and out or change position
* "Hands - free" seat belts are available in some models
* The front seat may offer a passenger with disabilities more room since there is no center post obstruction
* Door opening should be of adequate width and height, two door cars usually have wider door openings
* Door ledge should be low to the ground for ease in getting in, and to the car floor (shallow floor-well for getting out or loading a wheel chair)
* Opening and shutting the door (especially from inside) and adjusting the seat belt should be easy
* Storage space for your mobility aids (wheel chair, crutches etc) should be adequate and easily accessible

மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கொண்டு உடல் அங்கவீனமானவர்களின் தன்மைகளுக்கு ஏற்றமாதிரி விதம் விதமான உருவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களை வாங்கிக் கொள்ளலாம்.

ரொன்ரோவில் ஒரு அங்கவீனமானவரின் உடல் நிலைமையினை பரிசோதனை செய்து, எப்படியான வாகனத்தினை வாங்கிக் கொள்ள வேண்டும் என்ற அங்கீகாரத்தினை பின்வரும் விலாசத்தில் உள்ள நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும் போது உதவி செய்வார்கள்.

Hugh Macmillan Rehabilitation Center
Driver Rehabilitation Services
350 Rumsey Road
Toronto, Ontario
M4G 1R8
Phone (416) 425-6220 ext 490

இதே இடத்தில் உடல் அங்கவீமனானவர் தமக்குரிய வாகனம் ஓட்டும் பயிற்சியினையும் பெற்றுக் கொள்ளலாம். ஒரு வாகனத்தினை விசேட உபகரணங்களை பொருத்தி, உடல் அங்கவீனமானவர் ஒருவர் இலகுவாக செலுத்தக் கூடிய வாகனமாக மாற்றும் உபகரணங்களையோ அல்லது அச் சேவையினையோ ரொரன்ரோவில் பின்வரும் இடத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.

Don Caster Home Health Care Center
678 Kennedy Road
Scarborough, Ontario
M1K 2B5
Phone: (416) 266-4436

அல்லது

Doncaster Home Health Care Center
7310 Woodbine Ave., Unit 1A
Markham, Ontario
L3R 1A4
Phone: (905) 474 - 3900

அல்லது

150 Lakeshore Road West
Mississauga, Ontario
L5H 3R2
Phone: (905) 274 - 2201

உடல் அங்கவீனமானவர் தமது அங்கவீனத்தில் ஏதாவது முன்னேற்றங்கள், மாற்றங்கள் ஏற்பட்டால் போக்குவரத்து அமைச்சுக்கு பின்வரும் விலாசத்திற்கு மருத்துவ அத்தாட்சியுடன் அறிவித்து சாதாரண வாகனம் ஓட்டும் தரம் பற்றி நிரூபிக்க வேண்டும்.







தமிழர்கள் மத்தியில் பலவருட அனுபவம் மிக்கவர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதியதோர் வெதுப்பகம்

BREAD MASTER BAKERY

பிறட் மாஸ்ரர் பேக்கரி

மொத்த ஓடர்களுக்கு விசேட கழிவு வழங்கப்படும்



ரோஸ் பாண் கிடைக்கும்

பாண், பணிஸ், றோல்ஸ் அனைத்தும் சுடச்சுட எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

வாரத்தில் 7 நாட்களும்

3 for 0.99¢

31 TAPSCOTT ROAD, UNIT #B3
LOWER LEVEL, MALVERN TOWN CENTRE - SCARBOROUGH
TEL: (416) 299-5083


Ministry of transportation
Driver Improvement office
East Building
2680 Keele St.
Downsview, Ontario
M3M 3E6
Phone: (416) 235 - 1773

### விசேட வாகன தரிப்புப் பத்திரம்:

உடல் அங்கவீனமானவர்கள் தங்கள் அங்கவீனம் தொடர்பாக போக்குவரத்து அமைச்சுக்கு அறிவிக்கும் போது, சிறப்பு வாகனத் தரிப்புப் பத்திரம் வழங்குவார்கள். இப் பத்திரத்தினை வைத்திருப்பவர்கள் எந்த இடத்திலும் போக வேண்டிய இடத்திற்கு அண்மையாக விசேடமாக உள்ள தரிப்புகளில் நிறுத்தலாம். ஆனால் இப் பத்திரத்தினை இவ்வாறு வாகன தரிப்பு செய்யும் போது, வாகனத்தின் உள்ளே முன் கண்ணாடிக்கு முன்னே பத்திரத்தினை வைத்து அத்தாட்சியாக காண்பிக்க வேண்டும்.

தொடரும்....

மேலதிக தொடர்புகளிற்கு: சிவ பஞ்சலிங்கம் - (416) 321-0999
**(Professional Licensed Instructor In Car & Class Room)**

# பழந்தமிழர் கலாச்சாரமும் அக்குபங்ஷர் வைத்தியமும்

பகுதி:- 15 *-Dr. N. S. Moorthy Ph.D*

## முகப்பரிசோதனை - கண்கள் (தொடர்ச்சி)



நவீன மருத்துவத்தின் தந்தையென அழைக்கப்படும் HIPPOCRATES உடைய காலத்திலிருந்தே பல மருத்துவ நிபுணர்களும் அங்குமிங்குமாக கண்களை அவதானித்து நோய் நிலைகளை அறிந்து வந்துள்ளனர். நவீமயப்படுத்தப்பட்ட இம முறையை அறிமுகப்படுத்தியவர் ஹங்கேரி நாட்டில 1822 முதல் 1911 வரை வாழ்ந்த டாக்டர் இக்னேஸ் வொன் பெஸ்லி என்பவர் ஆவார் காலுடைந்த ஒர் ஆந்தைக்கு மருத்துவம் பார்த்துக் கொண்டிருக்கும் போது அதன் ஒரு கண்ணில் ஒரு அடையாளம் ஏற்பட்டு இருப்பதை அவதானித்தார்.

இம் மருத்துவப் பரிசோதனை முகத்தில் கண்ணின் நடுப் பகுதி (Iris) பன்னிரண்டு பகுதிகளாப் பிரிக்கப்பட்டு கற்பனையில் ஒரு சுற்றுவட்டத்தை உருவாக்கிப் பெருப்பித்து துண்டுகளாகக் கணிக்கப்படுகிறது. இப் பகுதிகள் ஒவ்வொன்றும் உடலின் முக்கிய பத்து உறுப்புக்களைப் பிரதிபலிக்கின்றன. இரு கண்மணிகளையும் சுற்றியுள்ள வளையங்கள் கண்களைக் குறிப்பனவாகவுள்ள கண்ணின் குறிப்பிட்ட பகுதியில் காணப்படும் அடையாளம் அல்லது நிறமாற்றம் இப் பகுதியில் குறிக்கப்பட்ட உடலுறுப்பின் நோய் நிலையை தெரியப்படுத்துகின்றது. கண்மணியின் முழுமையான தோற்றம் குறிப்பிட்ட நபரின் பொதுவான உடல்நிலையை அறிவிக்கின்றது. இதன் அடிப்படைத் தத்துவம் என்னவெனில் உடலின் ஒவ்வொரு உறுப்புக்களும் தனித்து இயங்குவதில்லை.

அவை ஒவ்வொன்றும் ஏனைய உறுப்புக்களுடனும் அவற்றின் செயல்பாடுகளுக்கும் தொடர்புடையவை என்பதே ஆகும். நோய்வாய்பட்ட ஒரு உறுப்பை நேரடியாக பரிசோதனை செய்யாமல் எவ்வாறு நோய் நிலையைக் கண்டறிய முடியும்? என்பது நவீன மருத்துவ உலகில் எழுந்துள்ள கேள்வியாகும். அதே வேளை மாற்றீடு மருத்துவ நிபுணர்கள் X-ray போன்ற கருவிகள் மூலம் நோய்களைக் கண்டறிவதை விரும்புவதில்லை. இது போன்ற சந்தர்ப்பங்களில் இம் முறை நன்கு பலனளிக்கின்றது. கண்கள் வெளிப்படையாக நன்கு பார்க்கக் கூடிய இடத்திலுள்ளன. அதிகளவு குருதிக் குழாய்களும் நரம்பு அந்தங்களும் இதில் உள்ளன. இம் முறையில் பாண்டித்தியம் பெற்றவர்கள் ஒரு நோயின் தன்மையை அறிய பரிசோதனைச் சாலையில் குருதியை பரிசோதித்து அறியப்படும் பெறுபேறுகளைப் போன்றே இம்முறை மூலமும் அறியமுடியும் எனக் கூறுகின்றனர்.

நவீன மருத்துவர்கள் இதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் ஒருவரது கண்கள் அவரது பொதுவான உடல் நிலையை அறிவிக்கின்றது என்பதை மட்டும் அவர்கள் மறுப்பதில்லை. ஏனைய மருத்துவ முறைகளால் காரணம் கண்டு பிடிக்கப்படாத நோய் நிலைகளில் இம் முறை நன்கு பலனளிக்க வல்லது. பொதுவாக அடிக்கடி களைப்புறும் ஒரு நோயாளியில் அதன் காரணத்தையறிய இது உதவுகின்றது. இம் முறையில் நிபுணத்துவம் பெற்ற ஒருவர் நோயாளியின் பொதுவான சுக நிலையையும் உணவு முறை வாழ்க்கை முறை ஆகியவற்றை முதலில் அறிந்து கொண்டு பின் கண்களை Torch விளக்கின் மூலம் அல்லது பெருப்பித்துக் காட்டும் கண்ணாடி மூலம் (Magnifying Glass) அல்லது விசேட நுணுக்குக் காட்டி (Microscope) ஆகியவற்றைக் கொண்டு பரிசோதனை செய்வார். சிலர் கண்களைப் புகைப்படமெடுத்து அதனைப் பரிசோதிப்பர்.

கண்மணியை அடுத்துள்ள நார்களின் உறுதியான தன்மை, அடர்த்தி, கருமையான நிறம் ஆகியன அவரது உடலின் திடத்தன்மையை விளக்குகின்றது. இவர்கள் அதிக சக்தி வாய்ந்தவர்களாகவும் ஏற்படும் சிறுசிறு நோய் நிலைகளிலிருந்து விரைவில் குணமடையக் கூடியவர்களாகவும் காணப்படுவர். கண்மணியின் நார்கள் ஐதாகவும், சோபையிழந்தும் காணப்படும் நபர்களில் சிகிச்சைக் காலம் நீண்டதாகவும் சுகநிலை ஏற்படக் காலதமாதம் ஏற்படும் எனவும் கொள்ளலாம்.

நோயாளி தனது நோயைக் கூறும் போது சிகிச்சையாளர் கண்ணின் வரைப் படத்தைத் தொடர்புபடுத்தி ஆராய்ந்து நோயின் காரணத்திற்கான உறுப்பைக் கண்டுபிடிக்கிறார். இம்முறை ஒரு சிகிச்சை முறையல்ல ஆனால் நோயை அறியப் பயன்படும் பரிசோதனை முறையே ஆகும்.

இறந்தவர்களின் கண்களைக் கூட இப்போது ஆராய்ந்து அவர்களுக்கு முன்பிருந்த நோய்களை கண்டு பிடிக்கிறார்கள். இம் முறையின் மூலம் பொருளாதார வளர்ச்சி குன்றிய மூன்றாம் உலக நாடுகளில் இம்முறை பரவியுள்ளதால் அதிக செலவுள்ள பரிசோதனைச் சாலைகளின்றி பலர் பயன் பெறக் கூடியதாக விருக்கிறது.

இத்தகைய பயனுள்ள கண்களை நாம் கவனமாகப் பாதுகாக்க வேண்டும். கண்கள் காதல் வயப்பட்டவர்களில் எவ்விதம் செயற்படுகின்றதென்பதை தமிழ் புலவர் வள்ளுவர் வெகு அழகாகக் கூறியுள்ளார்.

“ யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்
தானாக்கி மெல்ல நகும்” (குறள்:1094)

அதாவது ஒரு பெண்ணின் கண்கள் நாம் அவளைப் பார்க்கும் போது நாணத்தால் நிலத்தைத் நோக்கிய வண்ணமாக இருக்கும். நம் பார்வை அவளைவிட்டு அகன்றதும் அவளது கண்கள் எம்மை நாமறியா வண்ணம் நோக்கிப் பின்னர் மெதுவாக நகரும். இதனை அழகு தமிழில் ஆழமான கருத்தை குறுகிய குறளில் இப்படித் தர வேறு யாரால் முடியும்.

இத்தகைய பெருமை பெற்ற கண்களை மானுக்கும், கயல் மீனுக்கும், கரு வண்டுகளுக்கும், வேலுக்கும் உவமையாகப் பல கவிஞர்களும் பாடியுள்ளனர். ஆனால் புராணக் கதைகளில் வரும் கண்களில் அதிக சிறப்புப் பெற்ற கண் சிவபெருமானது நெற்றிக் கண்ணே ஆகும். நெற்றிக் கண் திறப்பினும் குற்றம் குற்றமேயென்று சொன்ன தமிழ்ச் சங்கத் தலைமைப் புலவர் நக்கீரனையே சுட்டெரித்த கண் அது! திரிபுரம் என்று சொல்லப்படுகின்ற மூன்று புரங்களையும் ஒன்றாக எரித்த அதி சக்தி வாய்ந்த அந்த மூன்றாவது கண் திரிச்சடைக் கடவுளாம் சிவனுக்குரிய சிறப்பம்சமன்றோ! அது மட்டுமல்லாமல் தேவர்களுக்கெல்லாம் அதிபதியான இந்திரன் தனது உடல் முழுவதும் கண்கள் உள்ளவன் என்று கூறப்படுவதிலிருந்து கண்களின் பெருமை மேலும் புலப்படுகின்றது.


உலகம் உய்வதற்காக தீயசக்திகளை அழித்து நல்லவற்றைப பாதுகாப்பதற்காக தீபங்களை ஏற்றிக் கொண்டாடப்படும் தீப ஒளித் (தீபவாளி) திருநாளில் நாமும் அறியாமை பேராசை, பொறாமை போன்ற தீய இருளை அகற்றி அன்பு, நன்றி, பெருந்தன்மை போன்ற ஒளி, விளக்குகளை நம்மனங்கிலும் ஏற்றிக் கொண்டாடுவோமாக.

தொடரும்....


நம்பிக்கையின் மறுபெயர் சோதீஸ்

ACTION HONDA

HONDA வாகனங்களின் ஒரே தமிழ் விற்பனைப் பிரதிநிதி சோதீஸ் மூலம் உங்களின் புதிய, பழைய வாகனங்களை சிறந்த சேவையுடன் பெற்று உங்களின் சேமிப்பை உறுதிப்படுத்துங்கள்.



anytime: 416-704-1179 office:416-281-1234

மாத இறுதி மலிவு விற்பனை


நேர்மையுடன் தமிழர் நலன் கொண்ட ஈழத்தமிழனாகிய சோதீஸ் விற்பனைக்கு பின்னருமான சேவையுடன் உங்கள் புதிய, பழைய வாகனங்களை எங்கும் கிடைக்காத குறைந்த விலையில் பெற அழையுங்கள்

LIFE TIME OIL CHANGE

Bad Credit? I WILL HELP YOU

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்


Mon, Fri, Sat: 9am- 6pm
Tues, Wed: 12pm- 9pm
4334 Kingston Rd, Scarborough




தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்

ரவி நடராஜா

- வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
- உரிய இழப்பீடுகள்
- மற்றைய இழப்பீடுகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள்
- மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள



Accident & Traffic Ticket
(13 Years Insurance Claims Experience)

Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.

Tel: (416) 755-2801
2390 Eglinton Ave. E.
Suite 223, Scar., Ont.

# விளையாட்டுத் தகவல்கள் (79)

-எஸ். கணேஷ்



## தமிழீழ உதைபந்தாட்டச் சங்கத்தின் (TESA) வளர்ச்சி பாதையில்....

ரொறன்ரோ மாநகரத்தில் தமிழர் மத்தியில்லான உதைபந்தாட்ட சரித்தில் ஒரு புதிய சகாப்தம் உருவாகியுள்ளது. எமக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்ட போட்டிகள் கடந்த பல வருடங்களாக நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. இவ் வருடம் உலகத் தமிழர் இயக்கத்தின் முழு முயற்சியால் எமது வளர்ச்சி பாதையில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு மைல் கல் படைக்கப்பட்டுள்ளது.

உதைபந்தாட்ட போட்டிகள் தமிழீழத்திலும் சரி உலகின் வேறு எந்த பகுதிகளிலாவது ஆடப்படும் போது. இதற்கு இரசிகர்களும் அதிகம்! விறுவிறுப்பும் அதிகம்!! ரொறன்ரோவிலும் சரி. மொன்றியலிலும் சரி உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெறும் போது பார்வையாளர்கள் அதிகம் காணப்படுவது உண்டு. இந்த விறுவிறுப்பான ஆட்டங்களினால் இரசிகர்களிடையே ஏற்படும் அளவுகடந்த மகிழ்ச்சி காரணமாகவும் இடை இடையே அசம்பாவிதங்களும் நடைபெறுவதும் உண்டு. தமிழர்களுடைய இரத்தம் மிகவும் தன்மானம் வாய்ந்த வெப்பநிலை கூடிய இரத்தமாகும். ஆகையால் இந்த சிறுசிறு அசம்பாவிதங்கள் கோஷ்டி சண்டையாக மாறியதும் எமது ரொறன்ரோ சரித்திரத்தில் நடைபெற்ற கவலைக்குரிய விடயங்களாகும். இவற்றுக்கெல்லாம் முற்றுப் புள்ளி வைக்குமாற் போல் உலகத்தமிழர் இயக்கம் விளையாட்டுத்துறையில் உலகெங்கும் தேசிய தலைவரின் பணிப்புரையின் கீழ் பலத்த அக்கறை காட்டி வருகின்றது. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரைய முடியும்" விளையாட்டுதுறை மூலம் முதியோருக்கும் சரி, இளையவர்களுக்கும் சரி நோய் நொடியற்று வாழ வேண்டுமானால் தேக ஆரோக்கியம் முக்கியம். தேக ஆரோக்கியத்துடன் வாழும் ஒருவர் தன்னை வளம்படுத்துவதுடன் நின்று விடால் தனது சமூகத்தையும் வளம்படுத்துகின்றார். ஒரு தனி மனிதன் உயரும் போது! சமூகம் உயருகின்றது! சமூகம் உயரும் போது அவன் நாட்டையே வளம்படுத்துகின்றான்!

கடந்த பல வருடங்களாக ரொறன்ரோ மாநகரில் உதைபந்தாட்டம் நடைபெற்று வருகின்றது. இங்கு திறமையன வீரர்கள் இருந்தும் வேறு இன மக்களால் எமது தமிழ் வீரர்கள் இனம் காணப்படவில்லை. காரணம் யாது? இதற்கு விடை "நாமே தான் காரணம்" இவ்வளவு காலமும் நாமே நமக்குள் சுற்று போட்டிகள் நடாத்திக் கொண்டு இருந்தமையும், முக்கியமாக 7 பேர் கொண்ட, 9 பேர் கொண்ட சுற்றுப் போட்டிகள் நடாத்திக் கொண்டிருந்தமையே காரணமாகும். உலகத்தில் எல்லா இடமும் 11 பேர் கொண்ட போட்டிகளே நடைபெறுகின்றது. 11 பேர் கொண்ட போட்டிகள் மூலம் **Team Work, Skill** ஆகியவை ஏற்படுத்த முடியும். 9 பேர், 7 பேர் கொண்ட போட்டிகளில் **Off-Side** இல்லை! இங்கு **Skill** உம் இல்லை!! திறந்த மைதானத்தில் பந்தை தட்டிபோட்டு குதிரை மாதிரி ஓடி எவ்வித பிரயோசனமும் இல்லை. இதன் மூலம் **Position, Skill Team Work** ஆகியவற்றை வளர்த்துக் கொள்ளமுடியாது. இதற்கு தகுந்த சான்றாக ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். கடந்த வருடம் **Red Cross** இனால் நடாத்தப்பட்ட **Mini World Cup** உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள் பல நாடுகளின் அணிகளுக்கிடையே ரொறனிரோவில் நடைபெற்றது. இதில் தமிழர் அணி மிகவும் திறமையாக விளையாடியது. ஆனால் தோல்விக்கு யாது காரணம்? ஒவ்வொரு ஆட்டத்திலும் 25 தடவைகள் அல்லது 30 தடவைகளுக்கு மேல் **Off - Side** நடுவர்களினால் தீர்க்கப்பட்டது. முக்கிய தோல்விக்கான காரணமே பல வருடங்கள் இங்கு நாம் **Off - Side Law**வை மறந்து விளையாடுவதே ஆகும். வேற்று நாட்டு அணிகளை நாம் வெல்ல முடியாது இருப்பதற்கு இதுவே ஒரு முக்கிய காரணம் ஆகும்.

இவ் வருடத்தின் முற்பகுதியில் இருந்து உலகத்தமிழர் இயக்கத்தின் பிரதிநிதிகள் ரொரன்றோவில் பலருடனும் கலந்து ஆலோசித்தனர். பல கழகங்களின் வேண்டுகோளுக்கிணங்க, இவ் வருடத்தில் இருந்து சகல உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளும் உலகத்தமிழர் இயக்கதின் விளையாட்டுப் பிரிவின் கீழ் சகல சட்டதிட்டங்களுக்கமைய நடைபெறும் என ஏகோபித்த ஆதரவு மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் ஒரு தேசிய அமைப்பின் கீழ் இப்போட்டிகள் நடாத்தப்படுகின்றது. இதனால் தயவு தாட்சண்ணியம் இன்றி எமது வீரர்களின் திறமையை நாம் ஒரு குடையின் கீழ் கொண்டுவரக்கூடியதாக உள்ளது. "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு". இதனால் பலகழகங்கள் வளர்த்தெடுக்கப்பட முடியும் அத்துடன் பண வசதியற்ற கழகங்களை இத் தேசிய அமைப்பு ஊக்குவிக்க முடியும். இதனால் சகல கழகங்களும் ஒருமித்து உலகத்தமிழர் இயக்கத்தின் கீழ் தமிழீழ உதைபந்தாட்டச் சங்கம் "TESA" உருவாக்கப்பட்டுள்ளது. இதன் நடைமுறை நிர்வாகிகளாக இவ் வருடம் உலகத்தமிழர் இயக்கத்தின் பிரதி நிதியாக திருவாளர் திரு அண்ணை அவர்களும், திருகோணமலை பிரபல 'சன்றைஸ்' விளையாட்டுக் கழக வீரரான திரு. நந்தன் அவர்களும் அரியாலை 'யுத்' விளையாட்டுக் கழக பிரபல்யமான வீரரான பாபு அவர்களும் அயராத முயற்சி மூலம் இச்சங்கத்தை முன்நின்று நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

இச் சங்கத்திற்கு கிடைத்த முதல் வெற்றியாக சகல 7 பேர், 9 பேர் கொண்ட போட்டிகளை நிறுத்தி **Leaugue System** அறிமுகப்படுத்தப்பட்டு, சகல போட்டிகளும் **FIFA** இற்கும் அமைய 11 பேர் கொண்ட போட்டிகள் ஆக்கப்பட்டுள்ளது. இதற்கு இப்போது பெருமளவு வரவேற்பும் தமிழ் மக்களிடையே இருந்து கிடைக்கப்பட்டுள்ளது.

இதற்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல் முதன் முதலாக கனடாவில் இருந்து தமிழர் அணி தெரிவு செய்யப்பட்டது. இவ் அணியை உலகத்தமிழர் இயக்கம் சுவிற்சலாந்து நாட்டில் ஆகஸ்ட் மாத இறுதியில் நடைபெற இருக்கும் "Tamil World Cup", (ஒவ்வொரு வருடமும் ஐரோப்பா முழுவதிலும் இருந்து வந்து பல நாட்டு தமிழ் வீரர்கள் அணிகள் கலந்து கொள்வது வழக்கம்) போட்டியில் கலந்து கொள்ள அழைத்துச் செல்கின்றது. கடந்த பல வருடங்களாக தமிழர் கூடி வாழும் கனடாவில் இருந்து ஒரு தமிழர் அணி பங்கு பெற்ற முடியவில்லை என்ற குறை இருந்துவந்தது. இதனை நிவர்த்தி செய்யும் முகமாக இவ் வருடம் கனேடிய தமிழர் அணி சுவிற்சலாந்து நாட்டில் நடைபெற இருக்கும் தமிழீழ **World Cup** போட்டிகளில் கலந்துகொள்ள இருக்கின்றது. இவ் அணியை கூட்டிச் செல்லும் உலகத்தமிழர் இயக்கத்திற்கு உதவப் பல தமிழ் வர்த்தக நிறுவனங்களும் முன் வந்துள்ளன என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். தமிழர் அணியினை தெரிவு செய்யுமுகமாக ஒவ்வொரு வாரமும் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இப் பயிற்சிகளை தமிழீழத்தில் மிகவும் பிரபல்யமான உதைபந்தாட்ட வீரரான புஷ்பா மாஸ்டர் அவர்கள் தமிழீழ உதைபந்தாட்ட சங்த்தின் தலைமையில் நடாத்திக் கொண்டிருக்கின்றார். இதன் பொறுப்பாளராக தமிழீழ சென். மேரிஸ் கழக முன்னை நாள் விளையாட்டு வீரரான திரு. ஆசிதாசன் அவர்கள் கடமையாற்றுகின்றார்கள்.

உலகத்தமிழர் இயக்கம் மேலும் பல பொது வேலை திட்டங்களை உதைபந்தாட்ட வீரர்களுக்கு அறிமுகப்படுத்த உள்ளது. **Summar** முடிந்தவுடன் **Indoor** பயிற்சி வகுப்புகளையும், இளம் வீரர்களுக்கு **U-13, U-17, U-19** ஆகிய வயது பிரிவுகளையும் ஏற்படுத்தி பயிற்சிப் பாசறைகளையும் அமைக்க உள்ளனர். 2002 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட அணிகள் **Ontaria League System** இலும் அறிமுகம் செய்து வைக்கப்படத் தீர்மானித்துள்ளனர். பல முயற்சிகளை முன்னெடுத்து இருக்கும் தமிழீழ உதைபந்தாட்டச் சங்கம் (TESA) தனது வளர்ச்சிப் பாதையில் எமது தமிழ் இளைஞர்களின் எதிர் காலத்தை முன்னிட்டு பல சாதனைகளை படைப்பார்கள் என்பது திண்ணமாகுகிறது!




**EASY HOME BUY**

வீடு விற்க வாங்க மற்றும் MORTGAGE வசதிகளுக்கான ஆலோசனைகளுக்கு அழையுங்கள்.

Thinking of Buying A Home or Selling Your Home and All Kind of Insurance!

With a small down payment, you could own your dream home.



FOR ALL YOUR HOUSING NEEDS CALL

**416-414-5562**

Kiruba Kirushan
*Service with a Broad Smile*

**யோகா சோதிடம்**



- ★ கிரகப் பொருத்தம் பார்த்தல்
- ★ சுபமுகூர்த்தம் கணித்தல்
- ★ சாதகக்குறிப்புக் கணித்தல்
- ★ பலன் பார்த்தல்

☎: (416) 299-8361



**J DAYCARE**

- 7 மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்கு சிறந்த பராமரிப்பு
- **ECE** தகுதி பெற்ற நடத்துனர்
- **TAX RECEIPT** வழங்கப்படும்
- காலை 7:00 மணி - மாலை 6:00 மணிவரை
- மாலை 6:00 மணி - மாலை 10:00 மணிவரை

**1 Hr. - $3.00**
**Day - $15.00**
**Week - $60.00**

தினசரி நடவடிக்கைகள்:-

✱ உள்ளக, வெளியக விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா

☎ 416-502-3033

தொடர்புகளுக்கு: **Mrs. S. J.** சௌந்தரநாயகம்

**151 Lamareaux Dr., TownHouse 99A**
**(Finch/Birchmount)**

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

—தொகுப்பு - பரம்

*1985ஆம் ஆண்டு வெளிவந்த படங்கள்*

90. பாடும் வானம் பாடி
91. பார்த்தஞாபகம் இல்லையோ
92. பிரேம பாசம்
93. பிள்ளை நிலா
94. புதுயுகம்
95. புதிய தீர்ப்பு
96. புதிய சகாப்தம்
97. பூவே பூச்சூடவா
98. பெருமை
99. பொருத்தம்
100. பௌர்ணமி அலைகள்
101. மருதாணி
102. மண்ணுக்கேத்த பொண்ணு
103. மங்கம்மா சபதம்
104. மீண்டும் பராசக்தி
105. மீண்டும் ஒரு காதல் கதை
106. முதல் மரியாதை
107. மூங்கணாங் கயிறு
108. [illegible]ல்மருவத்தூர் ஆதிபாரசக்தி
109. யார்
110. [illegible]ரா அழைக்கிறார்கள்
111. ராஜரிஷி
112. ராஜாகோபுரம்
113. ராஜா யுவராஜா
114. ராகவேந்ரர்
115. ராமன் ஸ்ரீ ராமன்
116. ராஜாத்தி ரோஜாக்கிளி
117. விலாங்கு மீன்
118. விஸ்வநாதன் வேலை வேணும்
119. வீரன்
120. வீட்டுக்காரி
121. வெற்றிக்கனி
122. வெள்ளை மனசு
123. வேலி
124. வேஷம்
125. ஜனனி
126. ஜப்பானில் கல்யாணராமன்
127. ஜானகி
128. ஹலோ யார் பேசறது
129. ஹோமாவின் காதலர்கள்

'முதல் மரியாதை' இது ஒரு வித்தியாசமான கதை அமைப்பைக் கொண்ட படமாகும். அதாவது வயதானவரை இளம் பெண் காதலிப்பதாக்க கொண்டது. சிறந்த கதையமைப்பு, சிறந்தபாடல்கள்(வைரமுத்து), சிறந்த இசையமைப்பு (இளையராஜா), சிறந்த இயக்கம்.

தமிழக அரசு, மத்திய அரசு ஆகியவற்றின் சிறந்த படம் எனத் தேர்ந்தெடுக்கப்பட்டு 100 நாட்கள் ஓடி வெற்றியீட்டிய இப் படத்தை இயக்குநர் இமயம் பாரதிராஜா இயக்கியிருந்தார். இப்படம் பாரதிராஜாவின் திரையுலக வாழ்க்கைக்கு மைல் கல்லாக அமைந்துள்ளது.




MUDHAL MARIYATHAI (1985)

### நட்சத்திரங்களின் முதல் படம்

- நெப்போலியன்--புது நெல்லு புது நாத்து
- வினித்--ஆவாரம்பூ
- ராதா--அலைகள் ஓய்வதில்லை
- ராதிகா--கிழக்கே போகும் ரயில்
- விஜயசாந்தி--கல்லுக்குள் ஈரம்
- ரேவதி--மண்வாசனை
- ஊர்வசி--முந்தானை முடிச்சு

## பழைய வாகனமா புதியதா?



ஒவ்வொரு நாளும் எம்மவர் வாகனங்களை தேடிக் கொண்டும் வாங்கிக் கொண்டும் தான் இருக்கின்றனர். இந்த வேளையில் இப்படியொரு கட்டுரையை வரைவது நல்லது என நம்புகிறேன். நீங்கள் இந்த நாட்டுக்குப் புதி[illegible]வராக இருப்பினும் அல்லது நீங்கள் முதல் தடவையாக வாகனம் வ[illegible]துபவராக இருப்பினும் பழைய வாகனத்தில் தொடங்குவது புத்திசாலித்தனமான காரியமாகும். அதைவிடுத்து எடுத்த எடுப்பிலேயே புதிய வாகனம் என்பது சரியாகாது. ஏனெனில் நீங்கள் உங்கள் காப்புறுதிக்காகவும் கூடுதலாக செலவு செய்ய வேண்டி வரும்.

உங்களுக்கு இங்கு வாகனம் ஓடிப் பழக்கம் அதிகம் இன்மையால் உங்கள் வாகனத்தையும் காயப்படுத்த நேரிடும். இவைகளை தவிப்பதற்காக பழையதில் தொடங்குதல் நலம்.

மற்றவர்களை எடுத்துக் கொண்டால் ஒரு வருடம் பழையது அல்லது ஞஞ என்று தேடுவது இயல்பு. Honda வாகனங்களைப் பொறுத்த வரையில் ஒரு வருடம் பழையதிற்கும் புதியதிற்கும் என்ற பெரிய வித்தியாசம் இல்லை.

உதாரணத்திற்கு ஒரு விளம்பரத்தில் 2000 Civic LX 47,000 km ஓடியதை $17,500 இக்கு போட்டிருந்தனர். ஆனால் அதே வாகனத்தை 2001 ஆண்டு புதியதை $500 கூடுதலாக வாங்கமுடியும். ஆகவே ஒரு வருடம் பழையதிற்கோ Demo இக்கோ போவதை விட புதியதை வாங்கலாம் என்று கூறி முடிக்கிறேன்.

சோதீஸ் (416) 704 - 1179

# வேலவன் பிலிம்ஸ் ஆதரவில் சினிமாப் போட்டி

இப்போட்டியில் வெற்றிபெறும் முதல் மூவருக்கு 'வேலவன் பிலிம்ஸ்' ஸ்தாபனத்தாரினால் திரைப்படத்திற்கான நுழைவுச்சீட்டு (Ticket) வழங்கப்படும்.

**சினிமா போட்டி # 9**

1. 'ஆனந்தம்' படத்திற்கு இசையமைத்தவர் யார்?
2. அண்மையில் வெளிவந்த விசுவின் திரைக்கதை வசனம் டைரக்‌ஷனில் வெளிவந்த படம் எது?
3. 'கற்பூரதீபம்' படத்தின் கதாநாயகன் நாயகிகள் யார் ?

***சினிமாப் போட்டி #8இன் விடைகள்***

1. பிரசாந் & சிம்ரான்
2. சிவாஜி, K.R. விஜயா
3. நேருக்கு நேர் & பிரெண்ஸ்



**போட்டி #7இல் வெற்றி பெற்றவர்கள்**

1) சசிகரன், ஸ்காபுரோ

விடைகளை July 15, 2001 இற்கு முன்பாக 'உலக தமிழோசை' இன் முகவரிக்கு அல்லது தொலைநகல்- Fax: (416) 282-4978 இற்கு அனுப்பலாம்.

### அறிந்து கொள்ளுங்கள்

- சுக்கிரன் (வீனஸ்) இதன் விட்டம் 12,200 கி.மீ.சூரியனைச் சுற்றி வர 224 நாட்களாகும். தன்னைத் தானே சுற்றி வர 243 நாட்களாகும். அதிக ஒளி உள்ள கிரகம், பூமியை விடச் சிறியது. சூரியனை வலமாகக் சுற்றி வரும் கிரகம் இது ஒன்று தான்.


Tel: (416) 335-4070

NEW Technology Security and Sound Inc.



Fax: (416) 335-9936

உங்கள் வாகனங்களுக்குத் தேவையான

WINTER SPECIAL OFFER...
REMOTE STARTER $74.99
AND
ANOTHER SPECIAL
AVITAL ALARM WITH STARTER $74.99
NOW $399.99 (1/4 Mile Range)

CLIFFORD The Science Of Security
AVITAL Vehicle security
K-9 CAR ALARAM
VIPER
toucan INDUSTRIES. INC.
Pioneer
AUTO SECURITY COMPUSTAR
AR




EARTHQUAKE Born in the U.S.A.
PRESTIGE

✲ We also do any Electrical work

Audiobahn

நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும் பொருத்திக்கொள்ளவும் நாடுங்கள்.






Tel: (416) 335-4070
3501 McNicoll Ave., Unit #9, Scarborough, Ont M1V 2N3

# 21 ஆம் நூற்றாண்டில் கணணி இல்லாமல் மனிதன் வாழமுடியுமா?

-ராஜா சொக்கலிங்கம் raja@systemsplus.net
*Computer consultant*



பகுதி 29

## INTERNET உம் இன்னும் சில பயன்களும்

கணணியின் உலகத்தை கைக்கடக்கமாக உலகத்தை கொண்டு வந்த ஒரு சாதனம் Internet என்று சொல்லலாம். Internet பக்கங்களின் அளவு முன்னேறி இருக்கின்றது. அதனுடைய வேகம் அதிகப்பட்டு இருக்கின்றது. பல புதிய பரிமாணங்களை பெற்று இருக்கின்றது. ஒலிவடிவத்தில் துல்லியமாக பாடல்களை கேட்பதற்கு இன்றைய Internet மிக உதவியாக இருக்கின்றது. தொலைத் தொடர்பாக பல காணணிகளிற்கு இடையே பேசிக் கொள்ளவும் பல புதிய Program கள் வந்திருக்கின்றது. பல புதிய புதிய தமிழ்ப் பக்கங்கள் தமிழர்களால் உருவாக்கப்படட்டு வந்திருக்கின்றது. இந்த வகையில் எது புதிய பக்கங்கள் என்று கேட்கத் தேவையில்லை. நீங்கள் தேடுதல் இயந்திரம் என்று சொல்லக் கூடிய அந்த Search Engine களைப் பயன்படுத்தி இன்றைய புதிய புதிய பக்கங்களை தெரிந்து கொள்ளலாம். சில நாட்களுக்கு ஒரு முறையாவது இந்த தேடுதல் இயந்திரப் பகுதிக்குச் சென்று உங்களுக்கு வேண்டிய பக்கங்களைப் பார்க்கலாம்.

உதாரணமாக தமிழ் (Tamil) இது போன்ற வார்த்தைகளை type செய்து விட்டு நீங்கள் Search செய்து பார்த்தால் இன்றைய திகதியில் புதிய புதிய பக்கங்களைக் கூட உங்களுக்கு வழிகாட்டிக் கொடுக்கும் என்பதை உணருவீர்கள். இப்படியாக பல சிறப்பு வாய்ந்த Search Engine களை தெரிந்து கொள்வது நல்லது.

உதாரணங்கள்:

| | |
|---|---|
| yahoo.com | lycos.com |
| excite.com | webnawler.com |
| goto.com | hotbot.com |
| google.com | msn.com |

இப்படியாக இந்த Search Engine கள் மூலம் நீங்கள் புதிய புதிய இணையப் பக்கங்களை கண்டு களிக்க உதவியாக இருக்கின்றது. மேலும் இந்த Search Engine பக்கங்களில் கூட புதிய புதிய விளக்கங்களையும், புதிய புதிய ஆக்கங்களையும் கொடுத்து இருக்கின்றார்கள். பத்திரிகைகளைப் பட்டியல் இட்டுத் தருகின்றார்கள். ஒலி வடிவத்தை பட்டியல் இட்டுத் தருகின்றார்கள். பல பல புதிய பயன்பாட்டை நீங்கள் பெறலாம். முன்பெல்லாம் ஒரு நண்பனிடம் தொலைபேசியில் அழைத்து அல்லது நேரடியாக சென்று ஒரு விடயத்தை அறிந்து கொள்வோம். அதே போலத்தான் இன்றைய இணையப் பக்கத்தில் இந்த Search Engine கள் மிக பயனுள்ளதாக அதில் சென்று நீங்கள் கேட்டும் கேள்விகளுக்கு பல பல பதில்களை கொடுத்து உதவி செய்யும். இன்னும் சொல்லப் போனால் துல்லியமாக உதவி செய்யக் கூடியது.

ஒவ்வொரு Search Engine உம் நேரடியாக ஒரு பெயரை மட்டும் கொடுப்பதன் மூலம் அதற்கான இணையப் பக்கத்தை கொடுப்பது மட்டும் தான் அதன் வேலையல்ல. நீங்கள் அந்த Search Engine களை பயன்படுத்தும் முறையையும் சற்று தெரிந்து கொள்ள வேண்டும். Search செய்வதற்கு type செய்ய வேண்டிய முறை என்ன? எந்த இடத்தில் கம (cama), கோலன் (colon) என்பன போட வேண்டும் இப்படிப் போட்டால் அதனுடைய Search பண்ணுவதில் என்ன வேறுபாடு என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கான விளக்கங்களை அதே பகுதியில் மிக எளிமையாக கொடுத்திருக்கின்றார்கள். நீங்கள் கொடுத்த வார்த்தையை கொண்ட பக்கங்கள் வேண்டுமா அல்லது நீங்கள் கொடுத்திருக்கும் வார்த்தையை கொண்ட தலைப்பு கொண்ட பக்கங்கள் வேண்டுமா அல்லது உள்ளே இருக்கும் விடயங்களைக் கொண்ட பக்கங்கள் வேண்டுமா என்ற பல பல விடயங்களை தெரிந்து கொண்டு அதன் படி பயன்படுத்தினால் நீங்கள் எதிர்பார்ப்பதை விட மிக அதிகமாக பயனுள்ளதாக இருக்கும் இந்த Search Engine கள்.

அதேபோல் இந்த Search Engine கள் சொந்தமாக நீங்கள் வைத்திருக்கும் இணையப் பக்கங்களையும் அங்கு பதிவு செய்வதற்கு பயன்படுகின்றது. அதாவது நீங்கள் சொந்தமாக ஒரு இணையப் பக்கத்தை உண்டாக்கினீர்கள் என்று வைத்துக் கொள்வோம். இந்தப் பக்கத்தை மேலே சொன்னது போன்ற Search Engine களில் நீங்கள் பதிவு செய்ய வேண்டும். அப்பொழுது தான் அந்த Search Engine களுக்கு சென்று கேட்பவர்களிற்கு உங்களுடைய பக்கத்தை கொடுத்து அது உங்களிற்கு வழிநடத்தும் என்பதை மறந்து விடாதீர்கள். எனவே நீங்கள் Internet பக்கங்களை ஏற்படுத்துவது மட்டும் முக்கியமல்ல அதற்கு பின்பு அந்த பக்கங்களின் பெயர்களை Search Engine களின் ஊடாகப் பதிவு செய்ய வேண்டும்.

அப்பொழுது தான் குறிப்பிட்ட உலகத்தில் உள்ள அத்தனை பேரும் அந்த Search Engine களுக்கு சென்று தேடும் பொழுது அதில் உங்களுடைய பக்கங்களையும் அவர்களுக்கு தெரிந்திருக்கும் என்பதை மறக்கக் கூடாது. அப்படி பதிவு செய்வதற்கு எப்படி search Engine களிலே மிக சுலபமாக செல்வதற்கு வழி வைத்திருக்கின்றார்கள். அதாவத ஊர்ப் பக்கங்களில் பார்த்தீர்கள் என்றால் ஒரு சிறிய கிராமம் என்றால் ஒரு தேனீர்க்கடை இருக்கும். நீங்கள் அந்த கடைக்கு சென்று ஒரு குறிப்பிட்ட நபரின் பெயரைச் சொல்லி இவர் இந்த ஊரில் இருக்கின்றாரா அவர் யார் என்ற விபரத்தை கேட்டால் அவர் மிக விரைவாக உங்களுக்கு பதில் தருவார். இது போலத்தான் இந்த Search Engine களுக்கும் இவர்களுடன் பதிவு செய்யப்பட்டிருக்கும் பக்கங்களை நீங்கள் கேட்டவுடன் எடுத்துக் கொடுத்து விபரம் தரும். இந்த வேலையைத் தான் செய்கின்றது. இன்றைய காலகட்டத்தில் கணணியின் முக்கிய பங்கான Internet இன் முழுப் பயன்களையும் நீங்கள் பெறவேண்டுமானால் இது போன்ற Search Engine களை அடிக்கடி நோட்டமிட்டு புதிய புதிய விடயங்களை தெரிந்து கொள்வது மிக முக்கியம்.

இந்தியாவில் இருந்து மட்டுமல்லாமல் பொதுவாக தமிழர்களது புதிய புதிய பக்கங்களை ஒவ்வொரு நிமிடமும் வந்து கொண்டு இருக்கின்றது. அவற்றை நீங்கள் இனங் கண்டு தெரிந்து கொள்ள இந்த Internet Search Engine கள் மிகப் பயனுள்ளது என்பதை மறக்கக் கூடாது. இன்றைய காலகட்டத்தில் ஒவ்வொ வரும் தனக் கென்று ஒரு internet பக்கத்தை வைத்திருப்பது சிறந்தது. அதைவிட மிக முக்கியமானது மின்னஞ்சல் (Email) வைத்திருப்பது ஆகும். இலவசமாக கிடைக்கும் எத்தனையோ முகவரிகளை நீங்கள் பெற்றுக் கொண்டு பயன் பெறலாம். நீங்களும் நண்பர்களுக்கு இதைத் தெரிவித்து புதிய Email முகவரியை எடுக்க உதவி செய்யுங்கள். உங்களுக்குத் தமிழ் மட்டுமே தெரியும் என்றால் கூட இணையத்தை இந்தக் காலகட்டத்தில் பயன்படுத்தலாம். தமிழ் கூறும் பலபல பக்கங்கள் இன்று இணையத்தில் வலம் வந்து கொண்டு இருக்கின்றது. உலகம் உங்கள் முன் நிற்கிறது என்றால் அதற்கு இணையம் ஒன்றுதான் இணைப்பு.


**Safety Truck Training School Ltd.**

**Training & Trucking Classes A, D & Z**

கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்
TRUCK DRIVING பயிற்சி இடம் (7ஆம் ஆண்டு)
வாரத்தில் எழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

**We accept Welfare & Unemployment Insurance**




தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும். (One on One Training) அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.

**In Classes**
- 365 (Learning Permit)
- Lock Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்

**YOGAN SOCKALINGAM**
Truck Driving போதனாசிரியர்
14 Years Canadian Experience with Trucks)

**Tel: (905) 793-9546 / (416) 616-5979**

**250 Summerlea Road, Brampton, ON**

**ஞானம்ஸ் ஸ்ரூடியோ**




Introducing 1 Hour Photo Lab: 3x5 & 8x12
Professional Photographer - கதிர்
: 416-750-8118
*2381 EGLINTON AVE.E.*
*KENNEDY / EGLINTON, SCARBOROUGH*

**SYSTEM PLUS**
www.systemsplus.net
T.P (416) 321 - 5995
இதில் வரும் சந்தேகங்களையோ அல்லது எந்தத் துறையைப் பற்றி எழுதலாம் என்று நினைக்கிறீர்களோ என்பதைப் பற்றி "உலக தமிழோசை"க்கு நீங்கள் அறியத்தரவும்.
vlambaram.@email.com

# விண்வெளி 64

## அந்நியர்கள்:- அடையாளங்கள்

தருபவர்:- கனி



"அந்நாட்களில் இராட்சதர்கள் பூமியில் இருந்தார்கள்" விவிலியத்தின் ஆதியாகமம் 6ஆம் அதிகாரம் 6ஆம் வசனத்தின் ஒரு பகுதி. யார் இந்த இராட்சதர்கள்? அவர்கட்கு என்னவாயிற்று? இந்நாட்களில் ஏன் அவர்களைக் காணமுடியவில்லை? இது போன்ற பல கேள்விகள் உங்களுக்குள் எழவில்லையா? நம்மில் பலருக்கு எழுந்த இந்தக் கேள்விகளுக்கு பதிலாக அந்த இனம் அழிந்துவிட்டது என்ற பதில் ஒட்டு மொத்தமாகக் கிடைக்க அந்த விடயங்களையே மறந்துவிட்டிருப்போம். இராட்சதர்களையும் அவர்கள் பற்றிய எண்ணங்களையும் கொஞ்சம் நினைவுக்குள் கொண்டு வாருங்கள். பூமியின் அந்நியர்கள் வரிசையில் அவர்களையும் பார்ப்போம்.

இது பழைய வரலாறுகளைக் கூறுவதில் மதங்கள் பெரிய பங்கை ஆற்றுகின்றன. ஏறக்குறைய எல்லா மதங்களுமே இந்த இராட்சதர்கள் பற்றிக் கூறியுள்ளன. அத்துடன் எல்லா இன மக்களிடையேயும் இராட்சதர்கள் பற்றிய கதைகள் உண்டு. இராமன், முருகன் போன்ற தேவபுருசர்கள் அல்லது தேவர்கள் கடவுள்கள் பல இராட்சதர்களைக் கொன்று உலகைக் காப்பாற்றியதாக கதைகள், புராணங்கள் உண்டு. புகழ்பெற்ற "சிந்துபாத்" தின் பிரயாணக் கதைகளில் சிந்துபாத் ஒரு தடவை இராட்சதர்களது தீவை அடைந்ததாக கதை உண்டு. இராட்சதர்களது மன்னனாகக் கருதப்பட்ட இராவணனை இராமன் கொன்ற பின்பு இராட்சத இனம் சிறிது சிறிதாக அழிந்துவிட்டது எனக் கூறுகின்றார்கள். சில ஆய்வாளர்களது கருத்துப்படி தாவீதுவினால் கொல்லப்பட்ட "கோலியாத்" என்பவனே உலகின் கடைசி இராட்சதன் ஆகும். இவனுக்குப் பின் சரித்திரத்தில் எந்த ஒரு இராட்சதனும் இனம் பெறவில்லை என்கிறார்கள்.

இக் கதைகள், புராணங்கள் உண்மையோ கற்பனையோ எதுவாயிருந்தாலும் சரி இராட்சதர்களது எண்ணம் மனித இனத்திடையே பரவலாகவே இருந்திருக்கிறது. இன்றைய விஞ்ஞானிகள், ஆய்வாளர்களைக் கேட்டால் பூமியிலே இராட்சதர்கள் பலர் சஞ்சரித்திருக்க வேண்டும் எனக் கூறுகின்றார்கள். பூமியின் வரலாற்றில் எந்தக் காலகட்டத்தில் அவர்கள் இருந்திருக்க வேண்டும் என்பதைச் சரியாகக் கூறமுடியாவிட்டாலும் இந்த இராட்சதர்கள் பூமியின் சொந்தக்காரர்கள் இல்லை. அந்நியர்கள் ஏலியன்கள் என்கின்றார்கள் அவர். அதாவது பூமியல்லாத வேறு ஒரு கிரகத்தில் இருந்து வந்து பூமியின் பிள்ளைகளுடன் கலந்து வாழ்ந்திருக்க வேண்டும் என்கிறார்கள். 65 மில்லியன் வருடங்களின் முன்னர் வாழ்ந்த "டைனோசர்" என்ற பாரிய விலங்கினம் இயற்கையின் அனர்த்தத்தினால் முற்றாக அழிந்த போதும் அவற்றின் சுவடுகளை மனிதன் இன்று இனம் கண்டுகொள்ள முடிந்தது. ஆனால் இதுபோன்று இராட்சத மனிதர்களினது எலும்புக் கூடுகளோ அல்லது அவர்கள் தொடர்பான எந்தவொரு நேரடித் தடயங்களோ இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும் இராட்சதர்களை நினைவூட்டக் கூடிய சில சான்றுகள் இன்னும் பூமியிலே காணப்படுகின்றன.

ஈஸ்ரர் தீவில் பல ஆயிரக்கணக்கில் பிரமாண்டமான மனித உருவக் கற்சிலைகள் காணப்படுகின்றன. சாதாரண மனிதர்களினால் இச் சிலைகள் செதுக்கப்பட்டிருக்க முடியாது. செதுக்கப்பட்டிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. எனவே இச் சிலைகள் எல்லாம் ஒரு காலத்தில் அத்தீவில் வாழ்ந்த இராட்சதர்கள் செதுக்கிய சிலைகளாகவே இருக்க வேண்டும் என்பது சில ஆய்வாளர்களது எண்ணம். உலக அதிசயங்களில் ஒன்றான புதிர் நிறைந்த பிரமாண்டமான "பிரமிட்" கள் கூட இராட்சதர்களின் உதவியினால் தான் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது சில ஆய்வாளர்களினது அபிப்பிராயம். (இப் பிரமிட்டுகள் யூத அடிமைகளினால் கட்டப்பட்டிருக்க வேண்டும் எனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.) இப் பிரமிட்டுக்களை கட்டியவர்களுக்கு விண்வெளி பற்றி பிரமாதமான அறிவு இருந்திருக்க வேண்டும் என்கிறார்கள் சிலர். சில காலங்களில் எமது "மில்கிவே" கலக்சி, பால்வெளி கலக்சியானது நீண்ட வெண்கோடு போல வானிலே பிரகாசமாய்த் தெரியும். இதன் ஒரு புறத்தில் இருக்கும் பிரகாசமான நட்சத்திரங்களை இணைத்துப் பார்த்தால், எகிப்தின் நைல்நதி பால்வெளியாகவும் பிரமிட்டுக்கள் அந்த விண் மீன்களாகவும் அதே விகிதாசாரத்தில் இருப்பது தெரியவந்தது. இம்மியளவும் பிசகாத இந்த ஒற்றுமை ஒரு தற்செயலாக இருக்க முடியாது. யாரோ இந்த விண்வெளியை நன்கு அறிந்தவர்களாகவும் அந் நட்சத்திரங்களை விசேசமாக அறிந்தவர்களாகவும் இருந்தாலே ஒழிய இப்படியான அமைப்பை தொடர்பை உருவாக்கி இருக்க முடியாது. எனவே விண்வெளியை நன்கு அறிந்த ஏலியன்கள், அந்நியர்களான இராட்சதர்களாகவோ அல்லது அவர்களின் உதவியுடனேயோ தான் பிரமிட்டுக்கள் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்கள்.

**Neelam SILK**

**உயர் தரப் பட்டுப் புடவைகளிற்கு நீலம் சில்க்**

முகூர்த்தப் புடவைக்கு இராசியான இடம்

2001ஆம் ஆண்டின் புதுப்பட்டுத் தெரிவுகள் அனைத்தும் இப்பொழுது "நீலம் சில்க்" இல் கிடைக்கின்றன.

- JAPAN CRYSTAL SILK
- SONALIKA PURE SILK
- JARDHOSHI SATIN & CREPE SILK
- JAIPUR CRYSTAL SILK
- VASUNTHARA NETWORK CREPE

'தமிழர் மத்தியில் தரமான பட்டுப் புடவை மாளிகை'

**"நீலம் சில்க்"**


☎ :(416) 778-7455
FAX: (416) 778-8484
1453 GERRAD STREET
EAST (INDIAN BAZZAR)

* * *

புதிய கிளை
Tel: 416-759-2002
2378 EGLINTON AV.E
(Kennedy Rd. & Eglinton Ave. Scar.)



**ELECTRICAL REPAIRS**



உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் ரேடியோக்களை குறைந்த செலவிலும், சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ள நாடுங்கள்.

முருகதாஸ் - ☎ 416-261-6883

**VIMAC HOME RENOVATIONS**

SPECIALIZING IN INSTALLATION OF
* KITCHEN CABINETS
* COUNTER TOPS
* SPACE MAKING CABINETS
* BATHROOM /LAUNDRY UNITS
& GENERAL HOME RENOVATION

FREE ESTIMATE

CONTACT : VIC AT BUSINESS: 416 266 6566
416 266 7227

REPLACE YOUR COUNTER TOPS & SINK AT REASONABLE RATES

**கலைமகள் புத்தக நிலையம்**

- சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
- தமிழ்ப் புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
- இலங்கை/இந்திய பத்திரிகைகள்
- குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
- CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
- கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

594 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 921-5018

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E.
GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9
Newin Centre Mall
Mississauga, Ont.
☎: (905) 306-0494

## ஒரு சாதாரண மனிதனின் சிந்தனையில்....



### "உறவுகள்"

ஒரு மனிதனின் வாழ்க்கை, இந்த மண்ணில் வாழ்வது சில காலமேயானாலும், எம்மில் அனைவரும் எமக்கு அழிவே இல்லை என்பது போல, கண்மூடித்தனமாக இயற்கையை மறந்து வாழத் தலைப்படுகின்றோம். சுயநலத்தை கருத்தில் கொண்டு, எமது வாழ்க்கையின் முக்கியத்துவத்தையும், எமக்கு இந்த மண்ணில் கிடைத்த உறவுகளையும் உதாசீனப்படுத்துகின்றோம். எதிர்பாராத விதமாக சுடலை ஞானம் பிறக்கும் போது, எம்மையும் எமது உறவுகளையும் பற்றிச் சிந்திக்கின்றோம். எமக்கு கிடைத்த உறவுகளின் முக்கியத்தை உணர்ந்து, எம்மைத் திருத்தி ஏதோ வகையில் எமக்கு கிடைத்த உறவுகள் எல்லாம் எமக்கு கிடைத்த அரிய பொக்கிஷங்களே என்று எண்ணுகிறோம். இயன்ற வரையில் அன்பினால் எல்லோரையும் ஆழ வேண்டும் என்று எண்ணிய போதும், அந்த நல்ல எண்ணம் தோன்றிய வேகத்திலேயே அந்த எண்ணங்களுக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றோம். சில காலங்களில் மிக வேண்டிய உறவினை இழக்க நேரிடும் போது அப்படிச் செய்து இருக்கலாம், இப்படிச் செய்து இருக்கலாம், போயிருக்கலாம், பார்த்து இருக்கலாம், உதவி செய்து இருக்கலாம் என்று தாம் செய்து இருக்க வேண்டிய விடயங்களை செய்யாமல் இருந்து விட்டும் கவலைப்பட்டும் யாருக்கு என்ன பிரயோசனம்? எம்மை நாமே நொந்து கொள்வதனால் ஆகப் போவது ஒன்றுமில்லை. ஆனால் எம்மையும், எம்மை சுற்றி நடக்கும் விடயங்களையும் அவதானித்து சிறிதளவு எம்மை நாமே மாற்றிக் கொண்டால் கவலையே மிகுந்த மனித வாழ்க்கையை கொஞ்சமாவது மகிழ்ச்சியானதாக மாற்றலாம். மனித இனத்திற்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் எதுவுமே இந்த மண்ணில் நிரந்தர மற்றதால், இழப்பையே எல்லாவற்றிற்கும் முடிவாக கொண்ட மனித வாழ்க்கை மகிழ்ச்சியை விட சோகமே நிறைந்தது என்பதை எவருமே என்றுமே மறந்து விடக் கூடாது. உறவுகளை எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்று முடிந்த வரையில் பார்ப்போம்.

